பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 14 ஞாயிற்றுக்கிழமை 28.01.2024 அதிர்வு 180

## கஞ்சாச் செடி வளர்த்த பிரிட்டிஷ் பிரஜை கைது

குஷ் போதைபொருள் தயாரிப்பதற்காக கஞ்சா செடிகளை வளர்த்து வந்த வெளிநாட்டவர் ஒருவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர் .

04




# தமிழரசின் நிர்வாகிகள் தெரிவு; கூட்ட முடிவுகள் அந்தரத்தில்!

## விடயத்தைத் தள்ளிப் போட மாவை, சிறீதரன் முடிவு

## இணக்கம் வராத நிலையில் சுமந்திரன் புறப்பட்டார்

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் தெரிவு தொடர்பாக அறிவிக்கப்பட்ட முடிவுகளை அப்படியே அந்தரத்தில் பேணவும், இறுதி தீர்மானங்களை எடுப்பதை தள்ளிப் போடவும் இன்று மதியம் மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

04



## பெண் பொலிஸ் உத்தியோகத்தர் மோ.சைக்கிள் விபத்தில் மரணம்

மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மீரிகம – பஸ்யால வீதியின் துமுன்னேகெதர பிரதேசத்தில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், அம்பேபுஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த வரகாபொல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 52 வயது

04

## வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் செத்துக் கரையொதுங்கும் ஆமைகள்



வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சில நாள்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

இந்த நிலையில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் இன்று காலை மூன்று ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

04



# கண்டாவளைப் பகுதியில் பஸ் கால்வாய்க்குள் பாய்ந்து விபத்து

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்தை சேதப்படுத்திய பின் கால்வாயில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டாவளை பகுதியில் நேற்று சனிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த தனியார் பஸ் ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் ஊழியர்களை ஏற்றிச் சென்றபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியைவிட்டு விலகி, அருகில் இருந்த மின் கம்பத்தை உடைத்துக் கொண்டு கால்வாயில் பாய்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் எவருக்கும் எந்தவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# வவுனியாவில் மோ.சைக்கிள் விபத்து

காரொன்றை முந்திச் செல்ல முயன்ற மோட்டார் சைக்கிள் காருடன் மோதி, கட்டுப்பாட்டை இழந்து, கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த சொகுசு பஸ்ஸுடனும் மோதுண்டு விபத்தில் சிக்கிய சம்பவம் வவுனியாவில் இன்று இடம்பெற்றுள்ளது.

எனினும், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.




# 1 கோடி ரூபா மதிப்பிலான பீடி இலைகள் வலி நிவாரணி மாத்திரைகள் பறிமுதல்

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 1 கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் மற்றும் வலி நிவாரணி மாத்திரைகளை தமிழகம் கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தூத்துக்குடி பகுதியில் இருந்து இலங்கைக்கு பீடி இலை கடத்தப் படுவதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனடிப்படையில் பொலிஸார் நேற்று முன்தினம் கடலோர பகுதிகளில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, தூத்துக்குடி அருகே உள்ள சிலுவைபட்டியில் இருந்து கடற்கரை செல்லும் வீதியில் சந்தேகப்படும் படியாக வந்த ஒரு சிறியரக லொறியை சோதனை செய்தனர். அதில் தலா 35 கிலோ எடை கொண்ட 76 மூட்டைகளில் மொத்தம் 2,660 கிலோ பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த பீடி இலையின் மதிப்பு 50 லட்சம் இலங்கை ரூபா என்று கூறப்படுகிறது.

இதேபோல் அப்பகுதியில் சந்தேகப் படும் படியாக மோட்டார் சைக்கிளில் வந்த நபரை பொலிஸார் வழிமறித்தனர். ஆனால் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, அவர் தப்பிச் சென்று விட்டார். மோட்டார் சைக்கிளை பொலிஸார் சோதனை செய்த போது, சுமார் 57 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. இதன் மொத்த மதிப்பு ஒரு லட்சம் ரூபா என்று கூறப்படுகிறது.

தொடர்ந்து பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, தருவைகுளத்தில் இருந்து வெள்ளப்பட்டிக்கு செல்லும் வீதியில் கடற்கரை பகுதியில் படகு ஒன்றிலிருந்து 76 மூடைகளில் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 50 லட்சம் இலங்கை ரூபா என்று கூறப்படுகிறது.

இதன்போது தூத்துக்குடி பகுதியை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

### சனத் நிஷாந்த விபத்தில் உயிரிழந்த சம்பவம்:

# மூன்றாவது வாகனம் தொடர்பில் பொலிஸாரின் விசாரணை ஆரம்பம்

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரி ஆகியோரின் உயிரிழப்புக்கு காரணமான விபத்துடன் தொடர்புடைய மூன்றாவது வாகனம் ஒன்று இருப்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்தில் தொடர்புடைய இரண்டு வாகனங்களின் ஓட்டுநர்கள் மூன்றாவது வாகனம் ஒன்று விபத்தின்போது பயணித்ததாக கூறியதால், நெடுஞ்சாலை பொலிஸாரிடம் இது தொடர்பில் ஆராயுமாறு கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்திற்குள்ளான இராஜாங்க அமைச்சரின் வாகனம் மற்றும் கனரக வாகனங்களின் சாரதிகளின் கூற்றுக்களின்படி, வேகமான ஓட்டம், கவனக் குறைவு, மோசமான தெரு விளக்குகள் மற்றும் மூன்றாவது வாகனம் வழி விடாமை என்பன, இந்த விபத்துக்கான காரணிகளாக அமைந்துள்ளன.

விபத்தின் போது இராஜாங்க அமைச்சரின ஜீப் அதிவேகமாக மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்துள்ளது.




இந்தநிலையில் விபத்துக்குள்ளான ஜீப் வாகனத்தின் ஓட்டுனர், வாகன விளக்குகளை ஒளிரச் செய்து மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டதை தான் அவதானித்ததாக பிணையில் அனுமதிக்கப்பட்ட கனரக கொள்கலன் சாரதி தெரிவித்துள்ளார்.

தமக்கு பின்னால் இரண்டு வாகனங்களும் ஆபத்தான முறையில் இயக்கப்படுவதை உணர்ந்த அவர், தனது வாகனத்தை இரட்டைப் பாதை அதிவேக நெடுஞ்சாலையின் இடதுபுறமாக நகர்த்தியுள்ளார்.

இதன்போது முதலில் பயணித்த வாகனம், கனரக கொள்கலனைக் கடந்து சென்றபோது, அமைச்சரின் ஜீப் கொள்கலனின் பின்பகுதியில் மோதியது.

இந்தநிலையில் விமான நிலையத்தில் இருந்து திரும்பிக்கொண்டிருந்த ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரியுடன் பயணித்த பொலிஸ் அதிகாரி ஒருவரே, விபத்தைப் பார்த்து முதலில் வாகனத்தை நிறுத்தியுள்ளார்.

அத்துடன் அவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கும், அவசர சேவை வாகனங்களுக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதேவேளை அமைச்சர் சனத் நிசாந்தவையும் அவரது மெய்ப்பாதுகாவலரையும் விபத்து இடிவுகளுக்குள் இருந்து வெளியேற்றுவதற்கு சுமார் ஒரு மணித்தியாலத்துக்கும் மேல் ஆனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதானி குழுமத்தின் காற்றாலை மின் திட்டத்திற்காக தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும் அரசாங்கம்!

## சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையில் தகவல்

அதானி குழுமத்தின் 250 மெகா வோட் மன்னார் காற்றாலை மின் திட்டத்திற்காக பெரும்பாலான தனியாருக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்தும் பணியை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரின் வளமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட பறவையினங்களுக்கு இந்த திட்டத்தினால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க, வலுவான நடவடிக்கைகளின் அவசியத்தை இந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே இலங்கை மின்சார சபையினால் நிர்வகிக்கப்படும் தமபாபவனி காற்றாலை மின் திட்டத்தினால், கணிக்கப்பட்டதை விட அதிக பறவை ஆபத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளதை கருத்திற்கொண்டே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதானி கிரீன் எனர்ஜி ஸ்ரீலங்கா லிமிடெட் இந்த திட்டத்துக்கான முதலீடாக 420 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுகிறது.

மொத்தமாக அமைக்கப்படவுள்ள 52 காற்றாலைகள் ஒவ்வொன்றும் 5.2 மெகாவாட் திறன் கொண்டதாக இருக்கும்.



இந்த திட்டத்துக்காக வீதிகள் உட்பட தேவையான 201.98 ஹெக்டேர் நிலப்பரப்பு, அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டு அதானி திட்டத்துக்கு நீண்டகாலமாக குத்தகைக்கு விடப்படும்.

சேற்றுப் பகுதிகள் கரையோரப் பறவைகளுக்கு உணவளிக்கின்றன. மேலும் அவற்றில் அதிக எண்ணிக்கையிலான பறவைகள் நிலப்பரப்பை ஒரு தனித்துவமான வாழ்விடமாக மாற்றுகின்றன.

இது பூர்வீக நீர்வாழ் மற்றும் அரை நீர்வாழ் பறவைகளின் தாயகமாகவும் உள்ளது. சில இனங்கள் இந்த பகுதிகளை இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக பயன்படுத்துகின்றன.

முன்மொழியப்பட்ட காற்றாலை திட்டங்கள், அடம்ஸ் பாலம் தேசிய பூங்கா, விடத்தல்தீவு இயற்கை பாதுகாப்பு மற்றும் ராம்சார் தளமான வங்காலை சரணாலயம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

தலைமன்னார் மற்றும் அடம்ஸ் பாலம் ஆகியவை நீர்ப்பறவைகளுக்கான சரணாலயங்களாக அமைந்துள்ளன.

மன்னார், புலம்பெயரும் பறவைகளுக்கான ஒரு முக்கிய நுழைவு மற்றும் வெளியேறும் இடமாகும், ஆயிரக்கணக்கான பறறைகள் இந்த பாதை வழியாக மன்னார் தீவை அடைகின்றன.

அதன் பின்னரே அவர்கள் நாட்டின் உட்பகுதிகளுக்கு கலைந்து செல்கின்றன. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பறவைகளில் 30 வீதத்துக்கும் அதிக மானவை அதாவது 150 க்கும் மேற்பட்ட இனங்கள், இந்த பிராந்தியத்தில் உள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் திட்டத்தளம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, மொத்தம் 283 உயிரினங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் நான்கு உள்ளூர் இனங்கள் மற்றும் 81 உறுதிப்படுத்தப்பட்ட புலம்பெயர்ந்த இனங்கள் உள்ளன. அவற்றுள் 27 இனங்கள் தேசிய அளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன என்று சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழுரசின்...

மேற்படி கூட்டத்தில் சிறீதரன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோருடன் கலந்து கொண்டிருந்த சுமந்திரன் எம்.பி. இந்த விவகாரத்தில் இணக்கப்பாடு ஒன்றும் எட்டப்படாத நிலையில் கூட்டத்தை முடித்துக் கொண்டு வெளியேறினார் என்றும் தெரிகின்றது.

கட்சியின் தலைமைப் பொறுப்பை தாம் இன்னுமே ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், கட்சித் தலைவராக மாவை சேனாதிராஜாவே தொடர்கின்றார் என்றும் சிறீதரன் இன்று பிற்பகல் 'முரசு' வுக்குத் தெரிவித்தார்.

"இரண்டு தரப்புகளுக்கு இடையிலும் கொதிநிலை நிலவுகிறது. 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' முடிவு எடுக்க முடியாத நிலைமை உள்ளது. எல்லோரையும் சமாளித்து, அரவணைத்து, ஓர் இணக்கமான முடிவை காண வேண்டி இருப்பதால் சம்பந்தப்பட்ட தரப்புகளோடு நான் நேரடியாகப் பேச விருக்கிறேன். அதற்காக சற்றுக் காலம் இந்த விடயத்தில் முடிவெடுப்பதைத் தள்ளிப் போடத் தீர்மானித்துள்ளோம். செயலாளர் பதவி விடயத்தில்தான் இழுபறி நீடிக்கின்றது. அதுவும் திருகோணமலை - மட்டக்களப்புத் தரப்புகளுக்கு இடையிலான சிக்கலாக உள்ளது. இருதரப்புகளும் விட்டுக் கொடுத்து, செயலாளர் பதவியை கால அளவீட்டில் பங்கிட்டு, ஏதேனும் இணக்கத்திற்கு வர முடியுமா என்றும் பார்க்கின்றோம். இப்பிரச்சினைக்கு தீர்வுகாண எங்களுக்கு சற்று கால அவகாசம் தேவைப்படுகிறது. மாவை சேனாதிராஜா அடுத்து வரும் நாள்களில் சிங்கப்பூர் செல்கின்றார். அவர் பெப்ரவரி 10ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்புவார். அதன் பின்னர் இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்து ஒரு முடிவெடுப்போம். அதுவரை தற்போது உள்ள நிலைமை அப்படியே தொடரும்." - என்றார் சிறீதரன் எம்.பி.

### கஞ்சாச் செடி...

பெலியத்தை பகுதியில் சுற்றுலா வீசா மூலம் தங்கியிருந்த பிரித்தானிய பிரஜை ஒருவரே கைது செய்யப்பட் டுள்ளார் .

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியில் பொலிஸார் சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டனர் .

சுற்றிவளைப்பின்போது 5 அடி உயரமுடைய கஞ்சாச் செடிகள் பயிரிடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர் .

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பெண் பொலிஸ்...

டைய பெண் பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்தார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி லொறியுடப் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான பெண் பொலிஸ் அதிகாரி வட்டுப்பிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, புலஸ்திபுர - தம்பாலா - லங்காபுர புறவழிச்சாலையின் தம்பலா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிள் அதே திசையில் சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச் சென்ற சமயம் மோட்டார் சைக்கிள் டிப்பருக்கு முன்னால் கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

அல்கிலால்புர - தம்பலா பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை பொரளை - பேஸ் லைன் வீதியின் மவுண்ட் மேரி சந்திக்கு அருகில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

### வடமராட்சி...

கடலின் சீற்றம் காரணமாக கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்த ஆமைகள் உயிரிழந்து கரையொதுங்குகின்றன என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆமைகளை பிடிப்பதும், இறைச்சிக்காக பயன்படுத்துவதும் சட்டவிரோதம் என்பதால் கரையொதுங்கிய ஆமைகள் இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் துர்நாற்றம் வீசக்கூடிய நிலையிலும் உருக்குலைந்து காணப்படுகின்றமையும் குறிப்பிடத் தக்கது.




# கொக்கட்டிச்சோலைப் படுகொலையின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது மகிழடித்தீவில் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி உறுப்பினர்கள் சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கொக்கட்டிச் சோலை பிரதேசத்தை சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கிருந்த அப்பாவி பொதுமக்கள் 152 பேரை கைது செய்து துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்தனர்.

இந்த நிலையில் 37 ஆவது நினைவு தினத்தையிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெல்லாவெளி அமைப்பாளர் குமாரசிங்கம் தலைமையில் கட்சி உறுப்பினர்கள் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தியடைய நினைவு தூபியில் சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

# ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகை அதிகரிப்பு




2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் 1,000 ரூபாயினால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மாணவ, மாணவிகளின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

பொருளாதாரச் சிரமங்களுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி நிதியம் இந்த புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

2021/2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் இதுவரை 10 மாதாந்த தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, புலமைப்பரிசில் தொகை அதிகரிப்புடன், எதிர்வரும் பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6,000 ரூபா மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும் 2022/2023 ஆண்டு தொடர்பாக க.பொ.த சாதாரண தர பரீட்சையில் உயர் தேர்ச்சி பெற்ற 5,000 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த மாணவர் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வரை மாதாந்தம் 6000 ரூபா தொகையை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன்படி, இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தற்போது பிராந்திய மட்டத்தில் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தெரிவுகள் நிறைவடைந்தவுடன் உரிய மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## லஞ்சம், ஊழலை ஒழிக்க வாய்ப்பு

சர்வதேச நாணய நிதியம் போன்ற பன்னாட்டு அமைப்புக்களின் அழுத்தம் காரணமாக கொண்டுவரப்பட்ட 2023 ஆம் ஆண்டின் ஒன்பதாம் இலக்க லஞ்ச, ஊழல் தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், தனக்கு வழங்கப்பட்டுள்ள மேலதிக அதிகாரங்களை சரிவரப் பிரயோகித்து, நாட்டில் லஞ்ச மற்றும் ஊழல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் தனது செயற்பாடுகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தயாராகி வருகிறது.

இதன்படி, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல்வாதிகள் மற்றும் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா அளவிலான வேதனம் பெறும் அரச சேவையில் உள்ள உயர் அதிகாரிகள், ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் உள்ளிட்டோரின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ள லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு திட்டமிட்டுள்ளது.

இச்சட்டத்தின் 80(1) பிரிவின்படி, ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள் மற்றும் சட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட 31 துறைகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 க்கு முன் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிடம் தமது சொத்துக்கள் அல்லது பொறுப்பு தொடர்பான அறிக்கைகளை வழங்க வேண்டும்.

ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் தலைவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கைகளை பெற்றுக்கொள்ள ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை இதன் விசேட அம்சமாகும்.

இதன்படி, பத்திரிகை கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ள பத்திரிகை உரிமையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பீட அங்கத்தவர்கள் மற்றும் 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள பெற்ற ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பீட உறுப்பினர்கள் வருடாந்திர சொத்துக்கள் மற்றும் கடன் தொடர்பான அறிக்கைகளை சமர்பிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்டோர் தமது கணவன் அல்லது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும், மனைவி, கணவன் மற்றும் அவர்களுடன் பொதுவான வீட்டில் வசிக்கும் பிற நபர்கள் தொடர்பிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று சட்டம் கூறுவது முக்கிய விடயம்.

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கத் தவறியவர்களுக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படலாம் என்பது முக்கிய அம்சம்.

அத்தகைய குற்றவியல் விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒரு லட்சம் ரூபா அபராதம் அல்லது ஓராண்டு சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்க இந்தச் சட்டம் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின்படி, அரச துறையில் லஞ்சம் பெறுவது மட்டுமின்றி, தனியார் துறை லஞ்சம் சம்பவங்கள் குறித்தும் விசாரணை நடத்த லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்படி, தனியார் துறையில் இவ்வாறான லஞ்சத்தில் ஈடுபட்ட அதிகாரி ஒருவர் லஞ்ச ஊழல், விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹபரணை பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மனித வள முகாமையாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவராவார்.

ஹோட்டல் பணிப்பெண்ணுக்கு வேலை வாங்கி தருவார் எனவும், சம்பளத்தை உயர்த்தி தருவார் எனவும் கூறி அவரிடம் பாலியல் லஞ்சம் பெற்றமை உறுதியாகியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

கிடைத்துள்ள இந்தச் சட்டத்தை சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவின் அதிகாரிகளும், சட்ட நடைமுறையாக்கத் துறையினரும், நீதித்துறையினரும் இணைந்து முழு அளவில் நேர்மையாகக் கையாண்டால் லஞ்சம், ஊழலை ஓரளவுக்கேனும் குறைக்க கூடியதாக இருக்கும் என்று நம்பலாம்.

# வீடுகளை வாடகைக்கு வழங்கும் போது எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்

## பொலிஸார் கோரிக்கை

வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில் வழங்கும் போது எச்சரிக்கையுடன் செயற்படுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் அதிக விலைக் கொடுத்து வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில், பெற்றுக்கொண்டுள் ளமை யுக்திய போதைப்பொருள் விசேட சோதனை நடவடிக்கையின் போது தெரியவந்துள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக, வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில் வழங்கும் போது, அவதானத்துடன் செயற்படுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்படும் முரண்பாடுகளை தீர்க்க அவசர வேலைத்திட்டம்

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் முரண்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான அவசர வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டு வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களும் புனர்வாழ்வு நிலையங்களில் அனுமதிக்கப்படுவதே இந்த முரண்




பாடுகளுக்கு முக்கிய காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மாதத்தில் இரண்டு தடவைகள் கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கைதிகளுக்கு இடையில் மோதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ள போதிலும் இதற்கு நீண்டகால தீர்வு காணப்பட வேண்டுமென புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.




தீவகம் - திருமங்களம்சேரி வளாகம்

கரம்பொன் மேற்கு - ஊர்காவற்றுறை - இலங்கை

ஸ்ரீ ராஜ மாதங்கி அம்பாள் சந்நிதான அநாவர்த்தன அஸ்டபந்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேக பெருவிழா - 2024

திருச்சிற்றம்பலம்

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

திருச்சிற்றம்பலம்

**கணபதிஹோம வழிபாடு நர்த்தன கணபதி சந்தோஷநிர்த்தம்**
தை 14ம் நாள் (28.01.2024) ஞாயிறு அதிகாலை முதல் 7.00 மணி வரை

**பூர்வாங்க சாந்தி கிரிகையகள்**
28.01.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணி வரை

**நவக்கிரக ஹோமம், வாஸ்துசாந்தி மிருசத்கிரகணம்**
28.01.2024 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிமுதல் 6.00 மணி வரை

புதிய சுவாமிகளுக்கு அடியார்கள் நெல்லு, தண்ணீரினாலே அபிஷேகம் செய்து கொள்ளலாம்.
காலை 7.00 மணிமுதல் பி.ப. 7 .00 மணி வரை

**நந்தி கொடி வழிபாடு, யாக ஆரம்பம், திரவியஹோமம், சுவாமி வைத்தல், பஞ்சபுராணம், அந்தாதி பாராயணம், திருவருட் பிரசாதம்**
28.01.2024 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 7.00 மணிமுதல் 11.00 மணி வரை

அடியார்கள் மூலாலய தேவி மாதங்கி அம்பாளுக்கு பால்காப்பும், ஏனைய சுவாமிகளுக்கு எண்ணெய்க்காப்பும் சாத்திக்கொள்ளலாம். 29.01.2024 திங்கள் காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை

**மஹாகும்பாபிஷேகம் 29.01.2024 திங்கள் காலை 9.36 முதல் 11.06 மணிக்குள் நடைபெற்று நிறைவடையும்.**

சர்வசாதகம் 'சாதக சாரதி'
சிவ பிரம்மஸ்ரீ க.கௌரிசர்மா

பிரதம குரு 'அகோர சிவம்'
சிவ பிரம்மஸ்ரீ சிவ பத்மநாபசர்மா ... சாரியார்
(தென்திசை - ...)

விசேடகுரு 'கிரியாஜோதி'
சிவ பிரம்மஸ்ரீ நூர்கா நிலீபகுருக்கள்

நித்தியகுரு
பிரம்மஸ்ரீ ரகுநாத கோலகுலசர்மா
(ஸ்ரீ ராஜமாதங்கி சந்நிதி)

மங்கல வாத்தியம்
மணியம் (குழுவினர்)

கும்பாபிஷேக ஆசிகள்
ஸ்ரீ ராஜமாதங்கி சுவாமிகள்

ஆலய நிர்மாணம்
T. அருந்தவராசா, ந. பாரதிதாஸ், ச.குலமாறன்

வர்ணப்பூச்சு
ந. பாரதிதாஸ்

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.
13.02.2024 செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகத்துடன் பூர்த்தியடையும்.
கும்பாபிஷேகத்தன்றும், மண்டல பூர்த்தியன்றும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
ஆலயத்தை வந்தடையும் பேருந்து (Bus) 777 எனும் இலக்கம்
(யாழ்ப்பாணத்திலிருந்து கண்ணகித்துறை)

திரு.க. குகனேசன்
ஆலய ஸ்தாபகர் (தலைவர்)

'அனைவரும் வருக ஸ்ரீராஜமாதங்கி தாயார் அருள் பெறுக'




# பெண் முயற்சியாளர்களுக்கு களம் அமைத்து கொடுப்போம்

## அருந்ததியின் பணிப்பாளர் தெரிவிப்பு

பெண் முயற்சியாளர்கள் தங்களின் திறமைகளை வெளி கொண்டுவருவதற்கான ஒரு களமாக அருந்ததியின் 'மாற்று மோதிரம்' நிகழ்வு அமையும் என அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.மேகலா தெரிவித்துள்ளார்.

அருந்ததி நிறுவனத்தின் மாற்று மோதிரம் நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அது குறித்து அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாற்று மோதிரம் நிகழ்வானது மணப்பெண் அலங்காரம் மற்றும் திருமண கண்காட்சி என்பவற்றுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதில், அழகு கலை நிபுணர்கள், ஆரி வேலைபாடுகள் கலைஞர்கள், கேக் தயாரிப்பாளர்கள், புகைப்பட கலைஞர்கள், விடியோ கலைஞர்கள், ஆடை வடிவமைப்பாளர்கள் என திருமண நிகழ்வுடன் தொடர்புடைய கலைஞர்கள் பங்கேறவுள்ளனர்.

பெண் முயற்சியாளர்கள் தங்களின் திறமைகளை வெளி கொண்டுவருவதற்கான ஒரு களமாக நிகழ்வு அமையும்.

திருமண கண்காட்சிகளின்போது திருமணத்திற்கான அனைத்தும் வழங்குநர்கள் இவ்வாறான கண்காட்சியில் இணைததன் மூலமாக அவர்களும் தம்மை வெளி உலகத்திற்கு வெளிப்படுத்த முடியும்." – என்றார்.

அதேவேளை, மேற்படி ஊடக சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அழகுக்கலை நிபுணரான வித்தியா நிரஞ்சன் தெரிவிக்கையில் ,

"பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் பலர் தற்போது உருவாகி வருகின்றனர். இவ்வாறான நிகழ்வுகள் அவர்களை மேலும் வளப்படுத்தும். அவர்களுக்கு இதொரு சிறந்த தளமாக அமையும்."– என்றார்.

ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட மற்றுமொரு அழகு கலை நிபுணரான கோபிநாத் தெரிவிக்கையில்'

"இவ்வாறான மணப்பெண் அலங்கார கண்காட்சிகள் மூலம் வித்தியாசமாக சிந்தித்து, புதிய வித்தியசமான அலங்காரங்களை செய்ய தூண்டும். இதன் ஊடாக எம்மை நாம் வளப்படுத்தி எங்களை உலகத்திற்கு வெளிப்படுத்த முடியும்."– என்றார்.

இந்த சந்திப்பில் அழகுக்கலை நிபுணர்களான கயல்விழி ஜெயபிரகாஷ் மற்றும் வி. அனிதா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# நல்லூர் எஜமானின் தாயார் காலமானார்



நல்லூர் எஜமானின் தாயார் சுகிர்தா தேவி குமராதாஸ் மாப்பாணமுதலியார் குகபதமடைந்தார்.

நல்லூர் கந்தசாமி கோவிலின் பத்தாவது நிர்வாக அதிகாரி அமரர் குமாரதாஸ் மாப்பாண முதலியாரது துணைவியாரும் தற்போதைய பதினொராவது நிர்வாக அதிகாரி குமரேஷ் ஷயந்தன குமாரதாஸ மாப்பாண முதலியாரது தாயாருமாகிய அமரர் சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார் இன்று குகபதமடைந்தார்.

அன்னாரது இறுதிகிரிகைகள் யாழ்ப்பாணம் நல்லூர் மாப்பாணர் வளவில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்று பூதவுடல் தகனகிரிகைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# கிழக்கு மாகாண ஆளுநரின் பங்குபற்றலில் போதைப்பொருள் அற்ற தேசம் நிகழ்ச்சி

(எம்.எம்.றம்ஸீன்)

அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டலில் 'யுக்திய' போதைப்பொருள் அற்ற தேசம் மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சி திட்டத்தின் நிகழ்வு சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அத்துடன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, பொலிஸ் உயர் அதிகாரிகள், அம்பாறை, சம்மாந்துறை , நிந்தவூர், காரைதீவு, சவளக்கடை, மத்திய முகாம், பாணம, பொத்துவில் போன்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும், அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாடு சபையின் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பாளர் முகம்மட் றஷாட், அம்பாறை மாவட்ட செயலகத்தின் உளவளத்துணை இணைப்பாளர் மனுஸ் அபூபக்கர், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் முகம்மட், சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டு அரங்கு பொறுப்பாளர் ஏ.அப்துல் சலாம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.







# அல்லாரை ஐங்கரன் முன்பள்ளி மீள ஆரம்பித்து வைக்கப்பட்டது

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேசசபையின் கட்டுப்பாட்டில் உள்ள அல்லாரை தெற்கு ஐங்கரன் முன்பள்ளி தைப் பூச தினத்தன்று உரிய சமய சம்பிரதாயங்களுடன் மீளவும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேசசபைச் செயலாளர் சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ரா. மயில்வாகனசிங்கம் மற்றும் போகட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் தி. அபராஜிதன் ஆகியோர் கலந்து கொண்டு முன்பள்ளியைத் திறந்து வைத்திருந்தனர்.

முன்பள்ளி திறப்பு நிகழ்வைத் தொடர்ந்து ஏடு தொடக்கல் மற்றும் மழலைகளுக்கான பரிசளிப்பு ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

மேற்படி முன்பள்ளி கடந்த சில வருடங்களாக இயங்காத நிலையில் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# பொத்துவில் பிரதேசத்தில் மீண்டும் டெங்கு அபாயம்

## சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

"பொத்துவில் பிரதேசத்தில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதால், நுளம்பு பரவக்கூடிய வெற்றுக் காணிகளை வைத்திருப்போர் ஒரு வார காலத்திற்குள் காணிகளை துப்பரவு செய்யுங்கள்."

– இவ்வாறு பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்துள்ளார்.

பொது சுகாதார பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு செயலணி மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து வீட்டுக்கு வீடு டெங்கு நோய் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்பூட்டல், டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை துப்புரவு செய்தல் போன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் என வைத்தியர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் விசேட வேலைத்திட்டத்திற்கு அமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஸக்கீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினர் வீடுகளுக்கு வரும் போது மக்கள் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும். சுற்றுப் புறச் சூழலில் தேங்கும் நீர் நிலைகளை கண்டறிந்து பூச்சி கொல்லி மருந்துகளை தெளித்தல் அல்லது உயிரியல் கட்டுப்பாட்டு முறை மூலம் நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்துள்ளார்.

# வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவருக்கு புத்தகப் பைகள் விநியோகிக்கும் நிகழ்வு





(எம்.ஏ.ஏ.அக்தார்)

'தேவை அறிவோம் கை கொடுப்போம்' எனும் கருப்பொருளில் காத்தான்குடி மற்றும் மஞ்சந்தொடுவாய் பிரதேசங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 600 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கலாநிதி அலவி ஷரீப்தீன் கல்விச் சகாய நிதிய ஏற்பாட்டில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். எம். எம். அமீர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மாணவர்களுக்கு புத்தகப் பைகளை வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் கோட்டக் கல்வி பணிப்பாளர் அப்துல் ஹக்கீம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# பிர்லியன்ட் கல்லூரி பட்டமளிப்பு விழா

(எஸ்.அஷ்ரப்கான்)

சாய்ந்தமருது பிர்லியன்ட் கல்லூரியின் முன்பள்ளி பட்டமளிப்பு மற்றும் கலை நிகழ்ச்சி சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சஹிலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு, கடந்த 10 வருடங்களாக இயங்கி வரும் இந்தக் கல்லூரியில் இருந்து 2023 ஆம் கல்வியாண்டில் முன்பள்ளி பாடநெறியைப் பூர்த்திசெய்த 120 மாணவர்கள் முதலாம் தரத்திற்கு பாடசாலை செல்கின்றனர்.

பாடசாலை பொறுப்பாசிரியை ஏ. சி. சாமிலா பானு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சான்றிதழ் வழங்கல், நினைவுச் சின்னம் வழங்கல், பதக்கம் அணிவித்தல் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.












# 'ரோல் போல்' சம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொள்கின்றது மன்னார் அணி

தேசிய ரீதியில் அனுராதபுரம் தம்புத்தேகம மைதானத்தில் இன்று நடைபெறும் ஆறாவது 'ரோல் போல்' சம்பியன்ஷிப் போட்டியில் மன்னார் அணி கலந்து கொள்கின்றது.

இதற்கான முன்னாயத்த பயிற்சிகள் கடந்த சில வாரங்களாக இடம்பெற்றன. இந்த போட்டிகளில் வெற்றி பெற்றால் உலக சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு அதிகளவான மன்னார் வீரர்கள் செல்வதற்கு வாய்ப்புகள் உள்ளன என தெரிவிக்கப்பட்டது

மேலும் மன்னார் மாவட்டத்தில் 'ரோல் போல்' விளையாட்டு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து பலரின் உதவிகளோடு இயங்கி வருகிறது. இருந்தும், அதற்கான வளங்கள் குறைவாகவே காணப்படுகிறது.

அத்துடன், மன்னார் மாவட்டத்திலிருந்து பலர் சர்வதேச விளையாட்டுகளில் பங்கு கொள்ளுவதற்கும் வாய்ப்புகள் உள்ளது. எனவே மாவட்ட ரீதியில் 'ரோல் போல்' விளையாட்டு வீரர்களை சிறந்த முறையில் உருவாக்குவதற்கும், அவர்களுக்கு தேவையான அனைத்து விடயங்களையும் செய்து கொடுக்க முன்வர வேண்டும் என்று 'ரோல் போல்' விளையாட்டு நிகழ்வின் நிர்வாகிகளால் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.









# கிண்ணியா றஹ்மானியா பாலர் பாடசாலையின் ஆண்டு விழா

(எஸ். சினீஸ் கான்)

கிண்ணியா றஹ்மானியா பாலர் பாடசாலையின் ஆண்டு விழா நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் கலந்துகொண்டார்.

மேலும் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, சூராசபைத் தலைவர் பரீத் மற்றும் நலன்விரும்பிகள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.







# மக்களவை தேர்தல் தொகுதி பங்கீடு: தி.மு.க. - காங்கிரஸ் இன்று பேச்சு



மக்களவை தேர்தல் தொகுதி பங்கீடு தொடர்பாக தி.மு.க. – காங்கிரஸ் இடையே இன்று பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

மக்களவைத் தேர்தல் தொடர்பாக கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தை நடத்த தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தமிழ்நாடு காங்கிரஸில் தேசிய அளவில் ப.சிதம்பரம் தலைமையில் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு, மாநில அளவில் கே.எஸ். அழகிரி தலைமையில் முன்னாள் மாநிலதலைவர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, எம்.பி.க்கள் உள்ளிட்ட 31 பேர் கொண்ட தேர்தல் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே மாவட்ட தலைவர்கள், மாநில நிர்வாகிகள், மூத்த தலைவர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள் ஆகியோருடன் தொகுதி பங்கீடு தொடர்பாக மேலிட பார்வையாளர் அஜோய் குமார் அண்மையில் ஆலோசனை நடத்தி இருந்தார். அதில், குறைந்தது 15 இடங்களையாவது கேட்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில் அகில இந்திய காங்கிரஸ் நியமித்த தேசிய கூட்டணி பேச்சுவார்த்தை குழு அமைப்பாளர் முகுல் வாஸ்னிக், முன்னாள் மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித், தமிழக பொறுப்பாளர் அஜோய் குமார், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி, சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள், அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள் ஆகியோருடன் இன்று சென்னை சத்தியமூர்த்தி பவனில் ஆலோசிக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து, தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் பேச்சுவார்த்தையில் பங்கேற்கின்றனர். அங்கு தி.மு.க. தொகுதி பங்கீட்டு குழு தலைவர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவுடன் பேசுகின்றனர்.

கடந்த தேர்தலில் புதுச்சேரி உட்பட 10 தொகுதிகள் காங்கிரஸ்க்கு ஒதுக்கப்பட்டன. இதில் தேனியை தவிர மற்ற 9 இடங்களில் காங்கிரஸ் வென்றது. இன்றைய பேச்சுவார்த்தைக்கு, புதுச்சேரி உட்பட 12 தொகுதிகள் இடம்பெற்ற பட்டியலுடன் காங்கிரஸ் தலைவர்கள் செல்ல இருகின்றனர் என கூறப்படுகிறது. இதில் புதுச்சேரி உட்பட 7 தொகுதிகளை ஒதுக்க தி.மு.க. திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

# வெல்லும் ஜனநாயகம் மாநாடு வென்றது: சமூக வலைதளத்தில் திருமாவளவன் பதிவு

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வெல்லும் ஜனநாயகம் மாநாடு வெற்றி பெற்றது என அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டம் சிறுகனூரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வெல்லும் ஜனநாயகம் மாநாடு நேற்று முன்தினம் நடை பெற்றது. மாநாட்டுக்கு கட்சித் தலைவர் திருமாவளவன் தலைமை தாங்கினார். இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின், மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கொம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் து.ராஜா உள்ளிட்ட இண்டியா கூட்டணித் தலைவர்கள்பங்கேற்றுஉரையாற்றினர். மாநாட்டில் 33 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த நிலையில், மாநாடு குறித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தனது சமூக வலைதள பக்கங்களில் வெளியிட்டுள்ள பதிவில்,



“சட்டமேதை அம்பேத்கர் வழியில் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளில் அதன் அடிப்படை விழுமியங்களைக் காக்க திருச்சியில் அலைகடலென திரண்ட லட்சக் கணக்கான விடுதலைச் சிறுத்தைகள். வெல்லும் ஜனநாயகம் மாநாடு வென்றது.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக முதல்வர் ஸ்பெயினுக்கு விஜயம்

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு ஸ்பெயினுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தமிழ் நாட்டுக்கு மேலும் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்



அதன்படி, சென்னையிலிருந்து நேற்று விமானம் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டுபாய்க்கு சென்றுள்ளார். அங்கிருந்து ஸ்வீடன் மற்றும் ஸ்பெயின் நாடுகளுக்கு அவர் செல்ல உள்ளார்.இதன்போது, தொழிலதிபர்கள், அரசு பிரதிநிகளை சந்திக்கவுள்ளார்.

# காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் பணயக் கைதிகள் கொல்லப்படுவார்கள்!



காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், பணயக் கைதிகள் கொல்லப்படுவார்கள் என ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஹமாஸ் ஆயுதப்பிரிவின் சமூக ஊடக பக்கத்தில் இந்த மிரட்டல் வாசகம் வெளியிடப்பட்டுள்ளது. ஹமாஸ் படைகளின் இந்த அச்சுறுத்தலானது போர் தொடங்கி 112 ஆவது நாளில் வெளியாகியுள்ளது.

அதில் மக்கள் கூட்டமாக தொலைக் காட்சியை உற்று நோக்குவது போலவும், திரையில் இஸ்ரேல் வான் தாக்குதலில் பணயக்கைதிகள் கொல்லப்படுவது போலவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அரேபிய மொழியிலும் ஹீப்ரூவிலும் பதிவிடப்பட்டுள்ளது. அதில் தங்களிடம் பணயக்கைதியாக இருந்த இஸ்ரேல் மக்கள் அந்த நாட்டின் வெடிகுண்டு தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் இந்த அச்சுறுத்தலானது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அவரது கண்மூடித்தனமான காசா தாக்குதலையும் இலக்காகக் கொண்டது என்றே கூறப்படுகிறது.

நெதன்யாகு போரை மீண்டும் முன்னெடுக்க விரும்பினால், இது போன்ற செய்திகளுக்கு தயாராக வேண்டும் எனவும் ஹமாஸ் எச்சரித்துள்ளது.

# புதிய புலம்பெயர் சட்டத்துக்கு எதிர்ப்பு: பிரான்ஸில் மக்கள் போராட்டம் வெடித்தது










பிரான்ஸின் சில பகுதிகளில் கடுமையான போராட்டங்கள் வெடித்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மேக்ரான், இந்தியாவின் சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக இந்தியா சென்றுள்ள நிலையிலேயே இவ்வாறு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரான்ஸ் அரசு புதிய புலம்பெயர் சட்டமொன்றை நிறைவேற்றும் முயற்சியில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இந்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வடமேற்கு பிரான்சிஸில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

மேற்படி சட்டம், விரும்பத்தகாதவர்கள் என கருதப்படும் வெளிநாட்டவர்களை நாடுகடத்துவதை எளிதாக்குகிறது. வெளிநாட்டவர்கள் அரசு உதவிகளை பெறுவதையும், பிரான்ஸ் நாட்டில் வாழும் வெளிநாட்டவர்கள் தங்கள் குடும்பத்தினரை பிரான்சுக்கு அழைத்துவருவதையும் கடினமாக்குகிறது.

போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான மக்கள் பொலிஸார் மீதும் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால், கண்ணாடிக் கதவு ஜன்னல்கள் உடைந்துள்ளன, குப்பைத்தொட்டிகள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்படுகின்றன. போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை பிரயோகித்துள்ளனர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.